செய்தி வெளியீடு எண். 165 நாள் : 24.03.2017

**திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட சுகாதாரத்துறை மற்றும் காவேரி மருத்துவமனை நிர்வாகத்துடன் இணைந்து நடைபெற்ற குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

~~~~~

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட சுகாதாரத்துறை மற்றும் காவேரி மருத்துவமனை நிர்வாகத்துடன் இணைந்து நடைபெற்ற குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.03.2017) பார்வையிட்டு கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார மையங்களில் இயங்கி வரும் ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய கார்யகராம் (RBSK) திட்டத்தின் கீழ் 28 அலகுகள் இயங்கி வருகின்றன. 2016-17 ஆண்டில் சுமார் 3,72,124 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு அவர்களில் 289 குழந்தைகள் இருதய நோய் பாதிக்கப்பட்ட குழந்தைகள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளோடு இணைந்து சிகிச்சை அளிக்கும் திட்டத்தின் கீழ் முதலாவதாக கடந்த டிசம்பர் திங்களில் அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகத்தோட இணைந்து செயல்படுத்திய முகாம் மூலம் 7 குழந்தைகளுக்கு இருதய அறுவைசிகிக்சை முடித்து நலமாக உள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக வெள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இம்மாவட்டத்திலுள்ள 28 ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய கார்யகராம் (RBSK) அலகின் மூலம் இருதய நோயால் பாதிக்கப்பட்ட 60 குழந்தைகள் சென்னை, காவேரி மருத்துவமனை நிர்வாகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை முகாமில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜே. பிரபாகர், மூத்த குழந்தைகள் இருதய சிகிச்சை நிபுனர் மரு. எம். பிரேம் சேகர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~